## போரதீவுப்பற்று பிரதேச சபை –2017, மட்டக்களப்பு

## 1 நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2017 ஆடிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018மார்ச்22 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததோடு கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 செப்தெம்பர்13 இல் சபையின் தவிசாளருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து போரதீவுப்பற்றுபிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2015 ஆம் ஆண்டு செய்து முடிக்கப்பட்ட இரண்டு வேலைகளுக்கான தொகை ரூபா 2,192,749 ஆனது 2016ஆம் ஆண்டு கிடைக்கப் பெற்றிருந்தது. இதன் போது சில்லறை கடன் கொடுநர் கணக்கு வரவு மற்றும் மூலதன மானிய கணக்கு செலவு வைப்பதற்கு பதிலாக சில்லறை கடன் கொடுநர் கணக்கில் வரவும் செலவும் வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில்கிராமங்களை அபிவிருத்தி செய்தல்திட்டங்களின் கீழ் ரூபா 2,612,435கிடைக்கப்பெற்று செலவு செய்யப்பட்டிருந்தது. இதன் போதுஆக்கப்பொருள் செலவினக் கணக்குக்குவரவு மற்றும் மூலதன மானிய கணக்குக்கு செலவு என கணக்கு வைப்பதற்கு பதிலாக வைப்புக்கணக்கினூடாக வரவும் செலவும் பதியப்பட்டிருந்தது.

1.3.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், என்பவற்றுடனான இணக்கமின்மை

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள் மற்றும் விதிகள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் 134(1) ஆம் பிரிவு | பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள அசைவற்ற ஆதனங்களை இனங்கண்டு அவற்றிக்கான ஆண்டுப் பெறுமதியை மதீப்பீடு செய்து வீதவரி அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ)1988 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி,நிருவாக விதிகள் | |
| (i) அத்தியாயம் x இன்பிரிவு 193 | ஆண்டுக்கான உள்ளபடியான வருமானம் மற்றும் செலவு தொடர்பான விபரங்கள் வரவு செலவு திட்டத்துடன் ஒப்பிடப்பட்டு முரண்பாட்டுக்கான விளக்கங்களை உள்ளடக்கிய கூற்று தயாரிக்கப்பட்டு கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (ii) அத்தியாயம் (xiii) இன் பிரிவு 218 | கணிப்பீடுச் சபையினால் சபைக்குச் சொந்தமான காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை. |
| (இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | |
| (i)நிதிப் பிரமாணம் 177(2) | 2016 மார்ச் 09 ஆம் திகதியில் இருந்து 2017 ஒக்டோபர் 31 ஆம் திகதி வரைக்கும் 27 முறைகளில் சேகரிக்கப்பட்ட பணம் ரூபா 370,083மறுநாள் வைப்பிலிடப்பட வேண்டியிருந்த போதிலும் ஏறக்குறைய 15 நாட்கள் காலம் தாழ்த்தியே வைப்பிலிடப்பட்டிருந்தது. |
| (ii) நிதிப் பிரமாணம் 389 | உரிய வழங்குனர்களுக்கு மற்றும் உரிமையாளருக்கு காசோலைகளை நேரடியாகவோ அல்லது பதிவுத் தபாலில் அனுப்புவதற்கு பதிலாக பிரதேச சபையில் கடமைபுரியும் உத்தியோகத்தரினால் பெறப்பட்டிருந்தது. |

| | |
|---|---|
| (iii)நி.பி 1645 மற்றும் 1646 | வாகனங்களுக்குரிய ஓட்டக்குறிப்புக்கள் மற்றும் மாதாந்தமூலப் பொழிப்புக்கள்ஒவ்வொரு மாதமும் அடுத்துவரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் சபையினால் பயன்படுத்தப்படும் வாகனங்களின்ஓட்டக்குறிப்புக்கள் மற்றும் மாதாந்த மூலப் பொழிப்புக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) 01/2012 ஆம் இலக்க 2012 ஜனவரி 05ஆம் திகதிய அரச நிதி சுற்றறிக்கை | ரூபா 10,207,767மதிப்பீட்டுப் பெறுமதியான 12 நிர்மாண வேலைகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களைத் தெரிவு செய்யும் போது இப்பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி 2017 திசெம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான செலவிலும் கூடிய வருமானம் ரூபா 4,356,779 ஆகும். இதனோடொத்தமுன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவிலும் கூடிய வருமானம் ரூபா 536,986 ஆக இருந்தமை மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 3,819,793முன்னேற்றத்தை காட்டுகின்றது.

### 2.2 வருமான முகாமைத்துவம்

#### 2.2.1 வருமான சேகரிப்பு செயலாற்றல்

2012 செப்டெம்பர் 07 ஆம் திகதிய 1775 இலக்க வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் போரதீவுப்பற்று பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட 05 கிராமங்களின் 12 கிராம சேவையாளர் பிரிவுகள் அபிவிருத்தி அடைந்த பிரதேசங்களாக பிரகடனப்படுத்தப்பட்டிருந்தும் வீதவரி வருமானத்தை அறவீடு செய்வதற்கான நடவடிக்கைகள் சபையினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல் மீளாய்வு

(அ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

ஐக்கிய நாடுகளின் அமைப்பின் அங்கத்துவ நாடுகளின் அரச தலைவர்களின் தலைமையில் 2015 ஆம் ஆண்டு நிலைபேறான அபிவிருத்தி மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டதன் பிரகாரம் சபையினால் 2030 ஆம் ஆண்டில் அடைந்து கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தி நிகழ்ச்சி

நிரல் தொடர்பாக அளவிடுவதற்கான குறிகாட்டிகளை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) திண்மக்கழிவு முகாமைத்துவம்

--------------------------------------

சபையின் எல்லைக்குள் உள்ள விவேகானந்தபுரம் எனும் இடத்தில் திண்ம கழிவு முகாமை செய்யும் நிலையம் அமைத்தலுக்காக 2016 நொவம்பர் 27 இல் ரூபா 1,822,222 செலவிடப்பட்டிருந்ததுடன் இப் பிரதேசத்தில் யானைகள் நடமாட்டம் அதிகரித்து காணப்படுவதுடன் அதனைத் தடுப்பதற்கான யானை வேலி அமைக்க நடவடிக்கைகள் எதுவும் செய்யப்படாததால் சுமார் 24 கொங்கிறீட் தூண்கள் மற்றும் 21.5m நீளமான அத்திவாரம் என்பன யானைகளினால் உடைக்கப்பட்டிருந்ததுடன்திண்ம கழிவு கொட்டுவதற்கு 2018 மே 11ஆம் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

----------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைப்புச் சபையிடமிருந்து 2016 பெப்ரவரி 11 ஆந் திகதி பெற்றுக் கொண்ட கடிதத்தின் பிரகாரம் 39ஆம் கிராமத்திலுள்ள மேற்படி திட்டத்தின் நீர்ப்பரிசோதனை அறிக்கையின்படி குடிப்பதற்கு உகந்த நீரின் நிறம், கலங்கல் நிலை (N.T.U) மற்றும் $NH_3$முறையே15,2,0.06ஆக இருக்க வேண்டிய போதிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட நீர்ப் பரிசோதனையின் படி அலகுகள் முறையே 241,37.3மற்றும் 0.33 ஆகக் காணப்படுவதால் அதை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படாமல் சபையினால் இத் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

(ஆ) 2013 ஆம் ஆண்டில் தயட்ட கிருள திட்டத்தின் கீழ் ரூபா 7,232,236 தொகையில் சபை எல்லைக்குட்பட்ட சின்னவத்தை கிராமத்தில் பொதுநூலக மாடிக் கட்டிடம் ஒன்று அமைப்பதற்காக உள்ளூராட்சி உதவி ஆணையாளரினால் ஒப்பந்தகாரர் ஒருவருடன் 2013 சனவரி 31ஆம் திகதி ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்ததற்கு இணங்கரூபா 1,935,435பெறுமதிக்கான வேலைகள் மாத்திரமே முடிவுற்று அதற்கான கொடுப்பனவு 2014 பெப்ரவரி 24ஆம் திகதி செலுத்தப்பட்டிருந்தது. இன்று வரை வேலை முடிக்கப்பட்டிருக்கவில்லை.

3.3 மனிதவள முகாமைத்துவம்

---------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டது.

(அ) வருமான பரிசோதகர் பதவிக்கு அனுமதிக்கப்பட்ட ஆளணியினர் 03 ஆக காணப்பட்ட போதும் ஒருவர் மாத்திரமே 2014 ம் ஆண்டிலிருந்து கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தார்.

(ஆ) நூலகர் பதவிக்கு அங்கீகரிக்கப்பட்ட ஆளணியினர்கள் 03 ஆக இருந்தபோதிலும் இப்பதவிக்குமீளாய்வாண்டில் ஒருவரும் நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சாரதி பதவியணிக்கு அனுமதிக்கப்பட்ட ஆளணியினர் 06 ஆக காணப்பட்ட போதிலும் 03 பேர் மாத்திரமே மீளாய்வாண்டில் நியமிக்கப்பட்டிருந்தனர்.

3.4 ஒப்பந்த நிர்வாகம்

2016 ஆம் ஆண்டின்வலுவூட்டல் செயற்திட்டத்தின் கீழ் வீதிகளை புனரமைத்தல், மலசலகூடம் புனரமைத்தல்,வீதிகளுக்கு பெயர்பலகையிடல், சிறுவர் பூங்கா அமைத்தல்,குடிநீர் வசதி செய்தல், வடிகான் வசதி செய்தல் போன்ற பத்து வேலைத் திட்டங்களுக்கான வேலைகள் முடிவுற்றதாக2016ம் ஆண்டு அறிக்கை சமர்ப்பித்து ரூபா 2,350,000பெறப்பட்டு2017ஆம் ஆண்டு வைப்பிலிடப்பட்டிருந்த போதிலும்2018 மே 11ஆம்திகதி வரை அவ் வேலைகள் செய்துமுடிக்கப்பட்டிருக்கவில்லை.

4 கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்

4.1 பாதீட்டுக்கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்காக திரட்டிய வீத வரிகள் ரூபா 1,050,000 மற்றும் அங்காடி வியாபாரம் வருமானம் ரூபா 250,000 மதிப்பீடுகள் செய்யப்பட்டிருந்த போதிலும் எதுவிதமான அறவீடுகளும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

5 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கீழ் குறிப்பிடப்படும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பான விடயங்களில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| கட்டுப்பாடுகள் | விசேட கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் |
|---|---|
| (அ) கணக்கீடு | பெற வேண்டியவைகளும் செலுத்த வேண்டியவைகளும் கணக்கிற்கு கொண்டுவரப்படுதல் வேண்டும். |
| (ஆ)வருமான முகாமைத்துவம் | வருமான நிலுவைகளை அறவிட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) பாதீட்டுக் கட்டுப்பாடு | பாதீட்டை தயாரிக்கும் போது பெறக்கூடிய வருமானங்களை கவனத்தில் கொள்ள வேண்டும். |